அண்மையில் ரூ. 2·50 லட்சம் வழங்கியுள்ளது. மேற்கொண்டும் ரூ. 5 லட்சம் ஒதுக்கிக் கொடுக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் வேண்டியுள்ளார். அவரது வேண்டுகோள் அரசின் ஆலோசனையில் உள்ளது. தீவனம் கிடைப்பதாகவும், துயர்தணிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லையென்றும் அவர் அறிவித்துள்ளார்.

கடன் தவணைகளைத் திருப்பிச் செலுத்துவதில் குளத்தூர் ஊராட்சி ஒன்றிய உழவர்கள் அனுபவிக்கின்ற இடர்ப்பாட்டினைப் பொறுத்தவரையில், மேட்டூர் உதவிக் கலெக்டரிடமிருந்து நிலைமையைக் கேட்டறிந்த பின்னர் அறிக்கை அனுப்புவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் வாக்குறுதி அளித்துள்ளார். இப்போதுள்ள நிலையில் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் கடன் தவணைகளை வசூலிப்பதை ஒத்திப்போடலாமென மாவட்ட ஆட்சித்தலைவர் கருத்தறிவிக்கலாம். அரசிடமிருந்து இதற்குச் சாதகமான பதிலே கிடைக்கும். எனினும், அத்தகைய தவணைத் தொகைகளை வசூலிப்பதை ஒத்திப்போட வேண்டிய நிலை இருக்குமானால், மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து மேற்கொண்டு அறிக்கை கிடைத்தபின் இது குறித்து அவசியமான கட்டளைகள் பிறப்பிக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன்: அங்கே உள்ள உதவிக் கலெக்டர் அவர்களிடத்தில் கடன்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனும் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. இதுபற்றி அரசாங்கம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உறுதியான உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைத்தான் சொன்னேன். மாவட்ட ஆட்சித் உதவித் தலைவரிடம் இருந்து அறிக்கை வரவேண்டும். அவர் ஒத்தி வைக்கலாம் என்று சொன்னால் கண்டிப்பாக அரசாங்கம் ஒத்தி வைக்கும் முறையில்தான் முடிவு எடுக்கும். அவருடைய அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதை விரைவில் அனுப்புமாறும் வற்புறுத்தியிருக்கிறோம்.

(இ) திருச்சி மாவட்டத்தில் சில வட்டங்களில் பருவ மழையின்மையும், கடன் வசூலை ஒற்றி வைத்தலும்.

புலவர் பொ. பொன்னம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், புதுகோட்டை பகுதியிலுள்ள பெரும்பாலான இடங்களிலும், குறிப்பாக திருமயம் தொகுதியில் பல இடங்களிலும், மற்றும் அரியலூர், உடையார்பாளையம் ஆகிய வட்டங்களிலும் பருவமழை பொய்த்தமையால், விளைச்சல் இன்றி குடிதண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியைப் பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, கடன் வசூலிப்பதை ஒற்றி வைக்க வேண்டிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஆர். கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை பகுதியிலுள்ள பெரும்பாலான இடங்களிலும், குறிப்பாக, திருமயம் தொகுதியில் பல இடங்களிலும், மற்றும் அரியலூர், உடையார்பாளையம் ஆகிய வட்டங்களிலும் பருவமழை பொய்த்தமையால் விளைச்சல் இன்று குடிதண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியைப் பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, கடன் வசூலிப்பதை ஒற்றி வைக்கவேண்டிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு.க.ந. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம புதுக்கோட்டை பகுதியிலுள்ள பெரும்பாலான இடங்களிலும், குறிப்பாக திருமயம் தொகுதியில் பல இடங்களிலும், மற்றும் அரியலூர், உடையார்பாளையம் ஆகிய வட்டங்களிலும் பருவ மழை பொய்த்தமையால், விளைச்சல் இன்றி குடிதண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியை பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, கடன் வசூலிப்பதை ஒற்றி வைக்க வேண்டிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களிலுள்ள வறட்சி நிலைமைகளுடன் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள நிலைமைகளின் தன்மையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குறைந்த இடர்ப்பாடே உள்ளதெனலாம். 1005 ஏரிகளுக்குப் போதுமான நீர் கிடைக்கவில்லையென்றும் இதனால் 24,220 ஏக்கர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். தள்ளுபடி செய்யும் தொகை தோராயமாக ரூ. 1,07,425 இருக்கும். சம்பா நெல் அறுவடையாகிறதென்றும் கொளத்தூர், திருமயம், அரியலூர், மணப்பாறை வட்டங்கள் தவிர மற்றப்பகுதிகளில் பயிர்களின் நிலைமை பொதுவாக மனநிறைவளிப்பதாய் உள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார். அமராவதி ஆற்றுக் கால்வாயில் நீரில்லை ; இப்போது பயிரிடப்பட்டுள்ள பயிர்களுக்குப் போதுமான நீர், பிறவாய்க்கால்களிலிருந்து வழங்கப்படுவதில்லை.

திருமயம் தொகுதியில் மட்டும் 10,163 ஏக்கர் பரப்பு நிலத்திற்குப் பாசன வசதி அளிக்கும் 497 ஏரிகள் நீர் வழங்கப்படாமையாலும் மழையின்மையாலும் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் வருவாய்த்துறை வாரிய நிலை ஆணைகளின் 13-வது விதியின் கீழ் நிலவரித் தள்ளுபடி அளிக்கப்படும். தள்ளுபடி செய்யப்படவேண்டியிருக்கும் தொகை ரூ. 64,137 ஆகும். திருமயம், கொளத்தூர், அரியலூர், மணப்பாறை வட்டங்களில் நெற்பயிர்கள் விளைவு, 0 சதவீதம் முதல் 30 சதவிகிதம் வரையில் ஆகும். குளித்தலை, மணப்பாறை வட்டங்களில் குடிநீர்ப் பற்றுக்குறை உள்ளது. இம்மாவட்டத்திலுள்ள பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு துயர் தணிப்பு நடவடிக்கைகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவது பற்றி, இது குறித்த மாவட்ட ஆட்சித்தலைவரின் விரிவான செயற்குறிப்புகள் கிடைக்கப் பெற்றதும் ஆலோசிக்கப்படும்.

***புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லுகிற நேரத்தில் மற்றைய பகுதிகளைப் போல் திருச்சி மாவட்டத்தில் பாதிப்பு இல்லை என்பதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அறிக்கை வந்திருப்பதைச் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்கள். ஆனால் திருச்சி மாவட்டத்தில் புதுக்கோட்டைப் பகுதியை என்றும் கொஞ்சம் தனியாகப் பார்க்கவேண்டிய சூழல் இருக்கிறது. திருச்சி மாவட்டம் என்று சொல்லும்போது புதுக்கோட்டையையும் திருச்சியோடு இணைத்துப் பார்க்கக் கூடிய காரணத்தினால் புதுக்கோட்டைப் பகுதிக்கு நல்ல பயன்தர முடியாத சூழல் அமைந்து விடுகிறது. புதுக்கோட்டைப் பகுதியில் அமைந்துள்ள ஆலங்குடி, கொளத்தூர், திருமயம் வட்டங்களுக்கு தனி ஆய்வு என்றைக்கும் தேவை. அந்த வகையில் இப்போது பார்த்தால் மழை பொய்த்தமையால் வித்திட்டும் விளைபயன் பெறமுடியாத ஒரு சூழல் ஏற்பட்டுவிட்டது. திருமயம், ஏம்பல், பனைப்பட்டி விராச்சிலை, கீழாநிலை, மதகம், ஆலவயல், நகரப்பட்டிப் பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுத் துன்புறும் நிலை இருக்கிறது...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த நேரத்தில் நீண்ட பிரசங்கம் செய்யக்கூடாது. விளக்கங்கள் கூடாது.

புலவர் பொ. பொன்னம்பலம் : ஆகவே, உரிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, குறிப்பாக அரியலூரைச் சுற்றியுள்ள வட்டாரங்களில் மழையின்மை காரணமாக குளங்கள் மூலம் பாசன வசதி பெறுகிற நிலங்கள் சேதமடைந்துவிட்டன. ஆகவே அரியலூர் சுற்று வட்டாரமாகிய ராயப்புரம் ஆதிகுடிகாடு மக்களுக்கு வசதியாக நியாயவிலைக் கடைகள் திறக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டைப் பகுதிகள் பற்றி உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களை, உணர்வுகளை நான் நிரம்ப மதிக்கிறேன். அதே மாதிரி அரியலூர் பகுதியில் நியாயவிலைக் கடைகள் திறக்கவேண்டும் என்று திரு. கருப்பையா

அவர்கள் சொன்னார்கள். அது உணவு அமைச்சர் அவர்கள் முடிவு செய்யவேண்டிய ஒன்று. பொதுவாகத் தவறான கருத்தை அவர்கள் கொண்டுவிட்டார்களோ என்று கொஞ்சம் பயமாக இருக்கிறது. வட ஆர்க்காடு மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் இவற்றில் இருக்கிற நிலை அங்கு இல்லை என்றுதான் சொன்னேன். அங்கு செழுமையாக இருக்கிறது என்று மந்திரி சொல்லிவிட்டார் என்று தவறாக திரு. கருப்பையா அவர்கள் சொல்லவில்லை, எதிர்கட்சிக்காரர்கள் பரிவாகயிருக்கிறார்கள். மக்களுக்கு நன்மை செய்கிற காரியங்கள் பற்றி எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அவர்களும் சொன்னார்கள். புதுக்கோட்டையைப் பற்றியும் எனக்குத் தெரியும். உறுப்பினர் அவர்களே ஒவ்வொரு ஊராக அழைத்துச் சென்று காட்டியிருக்கிறார்கள். அங்குள்ள நிலைமை எனக்குத் தெரியும். நான் சொன்னது என்னவென்றால், கலெக்டர் அவர்கள் என்னென்ன சிபார்சுகளைச் செய்கிறார்களோ அதன் அடிப்படையில் அந்தக் காரியங்கள் கவனிக்கப்படும் என்றுதான் சொன்னேன். அவர்கள் சொன்ன கருத்துக்களும் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கும். எடுக்கிற நடவடிக்கைகளில் புதுக்கோட்டையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப் படும். அரியலூர் வட்டார நிலையையும் பரிசிலனை செய்வதற்கு சாத்தியக் கூறான காரியங்களைச் செய்ய அரசாங்கம் தயாராகயிருக்கிறது.

திரு. க. ந. இராமச்சந்திரன் : திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டத்தைப் பற்றி நம் நிதி அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். அங்கு எப்போதுமே ஒருகுடம் தண்ணீர் பத்து பைசா கொடுத்து வாங்கும் நிலையில் இருந்த மக்கள் அங்கு அடிக்கடி வறட்சி நிலை ஏற்பட்டு விட்டதால் இன்று அவர்கள் ஒரு குடம் தண்ணீர் 20 பைசா கொடுத்து வாங்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அங்கு ஆடுமாடுகளுக்குக் கூடத் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அதை உத்தேசித்து அந்தப் பகுதியைப் பஞ்சப் பிரதேசமாக அறிவிப்பதோடு அல்லாமல், கூட்டுறவுக் கடன்களையும், அரசாங்கக் கடன்களையும் இந்த ஆண்டு ஒற்றிவைத்து அடுத்த ஆண்டு அவர்களிடமிருந்து நிச்சயம் வசூலித்துக் கொள்ளலாம் என்ற விதிவிலக்கை எங்கள் பகுதிக்கு அளிப்பார்களானால், அந்தப் பகுதி மக்கள் ஓரளவு பயன் பெறமுடியும். ஆகவே அதைப்பற்றி அருள்கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைப்பற்றி ஆராயலாம்.

(ஈ) கோபிசெட்டிபாளையம் வட்டத்தில் சில பிர்க்காக்களில் பருவ மழையின்மையும், துயர்தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளலும்

Thiru K. M. RAMASAMY GOUNDER : Under rule 41 of the Assembly Rules I call the attention of the Hon. Minister for Finance to a matter of urgent public importance, namely, the drought condition prevailing in certain pockets of Nambiyur and Punjaipuliampatti firkas and Siruvallur, Kollappalur, etc., villages in Gobichettipalayam taluk due to failure of monsoon and the consequent suffering of people for want of foodgrains, etc., the immediate necessity to declare the area as famine affected one, to postpone the collection of various loans and development taxes and to take immediate relief measures :

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, கோவை மாவட்டம் கோபிச்செட்டிப்பாளையம் வட்டம், நம்பியூர் புளியம்பட்டி பிர்க்காக்கள், சிறுவலூர், கொளப்பலூர் கிராமங்கள் உட்பட கோவை மாவட்டத்தின் சில பகுதிகளில் கடந்த இரண்டாண்டுகளில் பருவமழை பெய்யாததன் விளைவாக, பருவநிலை சரியாக இல்லை. இது பஞ்ச நிலைமையன்று; மிகுந்த வறட்சி நிலையே என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்து தெரிவித்துள்ளார். இந்த மாவட்டத்தில் பஞ்சத் துயர் தணிப்பு வேலைகளுக்காக அரசு ரூ. 24 லட்சம் வழங்கியுள்ளது. நம்பியூர் பிர்க்கா,